இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 37 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 30 – புதன்கிழமை 16 செப்டம்பர் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 37 : Thiruvalluvar Year - 2057 - Aavani 30 - Wednesday 16 September 2026 - Dak 10 Pages ₹ 5.00


## தலைநிமிர்ந்த தமிழர்! தலைநிமிர்ந்த தமிழ்நாடு! என்ற இலட்சியத்தை நனவாக்க –

# தமிழன்னைக்குப் பெயரிட்ட மாபெரும் தமிழ்க் கனவு பேரறிஞர் அண்ணா!

## 118–ஆவது பிறந்த நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



**சென்னை, செப். 16 –**

**தலைநிமிர்ந்த தமிழர்! தலைநிமிர்ந்த தமிழ்நாடு! என்ற இலட்சியத்தை நனவாக்க தமிழன்னைக்குப் பெயரிட்ட மாபெரும் தமிழ்க் கனவு பேரறிஞர் அண்ணா அவர்கள் என்று அவரது 118-ஆவது பிறந்த நாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளத்தில் புகழாரம் சூட்டியுள்ளார்.**


இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-


**தமிழ்நாட்டின் அரசியல் இலக்கணத்தை எழுதிய பேரறிஞர் அண்ணாவுக்குப் புகழ் வணக்கம்!**

**தலைநிமிர்ந்த தமிழர்! தலைநிமிர்ந்த தமிழ்நாடு! என்ற இலட்சியத்தை நனவாக்கத் தமிழன்னையின் தனயனாகப் பிறந்து தாய்க்குப் பெயரிட்ட மாபெரும் தமிழ்க் கனவு அவர்!**

**பேரறிஞர் அண்ணா சுயமரியாதையில் -சமூக நீதியில் - மாநில உரிமையில் - தமிழ்ப் பற்றில் என்றென்றும் வாழ்வார்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.






## கையாலாகாத, திறனற்ற ‘டம்மி’ முதல்வரின் ஆட்சியில்

# தமிழ்நாடு முழுவதும் வரலாறுகாணா மின்வெட்டு!

## பொதுமக்கள் சாலை மறியல்! த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் முற்றுகை!

**சென்னை, செப். 16 –**

**“கையாலாகாத திறனற்ற டம்மி முதலமைச்சர் விஜயின் ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் வரலாறு காணாத மின்வெட்டு ஏற்பட்டுள்ளதால் பல்வேறு இடங்களில் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டு த.வெ.க. எம்.எல்.ஏ.க்களை முற்றுகையிட்டனர்.**

இது பற்றிய விவரம் வருமாறு :-

மாநிலம் மற்றும் புறநகர் பகுதியில் முழுவதும் மின்தடை நீடிக்கிறது. தலைநகர் சென்னை அதிக இடங்களில் மின்வெட்டு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் அவதியடைந்து வருகிறார்கள்.

நெல்லை மாநகரில் இரவு 10 மணிக்கு மேல் 20 முதல் 30 நிமிடங்கள் வரை மின்தடை ஏற்படுகிறது.

**மதுரையில் 3 மணி நேரம்**

மதுரை, விருதுநகர் மாவட்டங்களில் காலை,மதியம், இரவு நேரங்களில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. ஒரு சில இடங்களில் 2 முதல் 3 மணி நேரம் வரை மின்தடை செய்யப்படுகிறது.

ராமநாதபுரம் மாவட்டத்திலும் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் இரவு நேரங்களில் 3 மணி நேரம் வரை மின்தடை ஏற்படுவதால் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

**வேலூர், திருப்பத்தூர்**

வேலூர் நகரை பொறுத்தவரை தினமும் காலை, மாலை வேளையில் சுமார் 15 முதல் 20 நிமிடங்கள் மின்தடை உள்ளது.


தொடர்ச்சி 3-ஆம் பக்கம்






பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று காலை, சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப்பொதுச் செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தங்கம் தென்னரசு, இராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் கழக நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்றனர்.